**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - 2022**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் (“ஆணைக்குழு”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்திற்கு இணங்கவும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு

அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 கணக்காய்விற்கு உரிய ஆவணச் சான்றின் கிடைப்பனவு அற்றதன்மை

| | கிடைப்பனவு அற்ற ஆவணச்சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காப்புறுதி மையக் கோட்பாடுகள் (ICPs) என்பது சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கம் (IAIS) மூலம் உருவாக்கபட்டு உலகளவில் ஏற்றுக்கொள்ளபட்ட கொள்கைகளின் கட்டமைப்பாகும். காப்புறுதிக் கட்டுப்பாட்டாளர்களின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைச் செயற்பாட்டின் தரத்தை மதிப்பபிடுவதற்கும் மற்றும் நாட்டில் காப்புறுதித் துறைக்கான விதிமுறைகளை | காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) 1, 2, 9, 10 ஆகியவை அங்கு மதிப்பீடு பெரும்பாலும் கவனிக்கப்படுகிறது. சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கத்தினால் தற்போது 25 காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) இனங்காணப்பட்டுள்ளது.<br><br>காப்புறுதிச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு நீதி அமைச்சினால் | முகாமைத்துவம் கோரப்பட்ட தகவலை கணக்காய்விற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிமுகப்படுத்துவதற்கான கட்டமைப்பாகப் பயன்படுத்துவதற்கும் அந்தக் கொள்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கத்தினுடைய (IAIS) உறுப்பினராக, ரூபா.5,999,664 தரகுப் பணம் 2022 ஆம் ஆண்டிற்கான அங்கத்தவர் கட்டணமாக செலுத்தப்பட்டு இருந்தது. 2021 ஆம் ஆண்டு கணக்காய்வின் போது ஆணைக்குழுவால் காப்புறுதி மையக் கோட்பாடுகளுக்கு இணங்குவதற்கான வழியைக் கண்டறிய தகவல் கோரப்பட்டது. எவ்வாறாயினும், கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உருவாக்கப்பட்ட குழுவினால் அனைத்து காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) களின் மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. மதிப்பாய்வுகள் இறுதி செய்யப்பட்டவுடன் பகிரப்படும்.<br><br>இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) 1-4 பற்றிய கருத்துகள் மற்றும் விளக்கக்காட்சிகளை குழுவிற்கு வழங்கியுள்ளது. குழுவானது ஒருங்கிணைந்த காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) களை மதிப்பாய்வு செய்யும் பணியில் உள்ளது. | |
| (ஆ) | ஆணைக்குழு 2020 ஆம் ஆண்டு வரை அந்தந்த ஆண்டுகளுக்கான ஆணைக்குழுவின் மிகை நிதியை காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றியது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டில் இந்தக் கொள்கை திடீரென மாற்றப்பட்டு, ஆணைக்குழுவின் நிதியின் மிகையானது திரட்டப்பட்ட நிதியமாக முன் கொண்டு செல்லப்பட்டது. எனினும், இது தொடர்பான ஆணைக்குழுவின் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 1வது கணக்காய்வுக் குழு (AC) கூட்டம் 20 ஏப்ரல் 2023 அன்று நடைபெற்றது, பின்வரும் பரிந்துரைகள் ஆணைக்குழுவிற்குச் செய்யப்பட்டுள்ளன:<br><br>1. இரண்டு பிரிக்கப்பட்ட நிதிகளுடன் (ஆணைக்குழு நிதி மற்றும் காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) ) தொடரவும் மற்றும் ஆணைக்குழு நிதியின் மிகையை திரட்டப்பட்ட நிதியாக வைத்திருக்கவும்.<br><br>2. தேவைப்பட்டால் சபையின் செலவுகளை (மீண்டெழும் மற்றும் மூலதனம்) ஈடுகட்ட காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) இன் வருடாந்த வட்டி வருவாயினுடைய 20% இல் அதிகபட்ச மாற்றத்தக்க சதவீதத்தை தொடரவும்.<br>03 ஆகஸ்ட் 2023 அன்று நடைபெற்ற 237வது கூட்டத்தில் | கணக்கியல் கொள்கைகள் அறிக்கையிடல் கட்டமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் பொருத்தமான அதிகாரத்துடன் மாற்றப்பட வேண்டும். |

மேற்க்கூறிய கணக்காய்வுக் குழு பரிந்துரையை ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் மிகைக்கு வருமான வரி செலுத்த ஆணைக்குழு பொறுப்பாகும். ஏவ்வாறாயினும், 2018ஆம் ஆண்டு முதல் இந்த ஆணைக்குழு வருமான வரி செலுத்தவில்லை. எனவே, 2018/19 முதல் 2022/23 வரையிலான மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரியைச் செலுத்தாததற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அபராதம் மற்றும் வட்டியை வசூலித்துள்ளது. 31 டிசம்பர் 2022 இன் மொத்த வரிப் பொறுப்பு ரூபா.909,009,476 ஆகும். | காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் வருமான வரிப் பொறுப்பு இன்றுவரை செலுத்தப்பட்ட தொகை ரூபா.1,265,453,413 ஆகும். உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது 2018/19 மற்றும் 2019/20 ஆம் ஆண்டிற்கான வருமான வரி செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் வட்டியாக ரூபா.153,621,910 மற்றும் அபராதமாக ரூபா.62,509,715 ஐ விதித்துள்ளது.<br><br>இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அபராதம் மற்றும் வட்டியை தள்ளுபடி செய்ய கோரியுள்ளது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 25 அக்டோபர் 2023 அன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பணம் செலுத்தக் கோரிய அறிவிப்பைப் பெற்றுள்ளதால், | நிலுவையில் உள்ள வரி விவகாரங்கள், வரி அதிகாரிகளுடன் கையாளப்பட்டு, தீர்வு காணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கணக்காய்வுக் குழு, வரி ஆலோசகரின் உள்ளீட்டைப் பெற்று வட்டிக் கூறுகளை உடனடியாக அனுப்புமாறு அறிவுறுத்தியுள்ளது, ஏனெனில் தற்போதுள்ள 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்துடன் தள்ளுபடி பெறுவதற்கு எந்த ஏற்பாடும் இல்லை.<br><br>மேலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 31 அக்டோபர் 2023 திகதியிட்ட அனுப்பியுள்ள கடிதத்தில், அபராதத்திற்கான விலக்கைக் கருத்தில் கொள்வதற்காக 2018/19 மற்றும் 2019/20 ஆகிய மதிப்பீட்டு ஆண்டிற்கான மொத்த திரட்டப்பட்ட வட்டியை செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.2.2 (a) (i) வழிகாட்டுதல் | ஆணைக்குழுவின் கூட்டங்களின் போது முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதை தவிசாளர் உறுதி செய்ய வேண்டும். எவ்வாறாயினும், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பந்தி 4 (3) மற்றும் முதல் அட்டவணையின் பிரகாரம் கூட்டங்களின் நடவடிக்கைகளுக்கான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை கணக்காய்விற்க்கு வழங்கப்படவில்லை. | காப்புறுதித் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. சட்டத்தின் முதல் அட்டவணையின் பந்தி 8 (1) குறிப்பாக கூறுவது சபை நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய தேவைகளை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு பின்பற்றுகிறது.<br><br>மேலும் ஆவணங்களை சமர்ப்பித்தல் மற்றும் நிமிடங்களை எடுத்துக்கொள்வதற்கான | ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை கணக்காய்விற்க்கு சமர்ப்பிக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடைமுறை கையேடு 16 ஆகஸ்ட் 2022 அன்று நடைபெற்ற அதன் 223வது கூட்டத்தில் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. | |
| (இ) | அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.2.2 (b) (iv) வழிகாட்டுதல் | ஆணைக்குழுவானது பணிப்பாளர் நாயகத்துடன் (DG) ஒரு செயல்திறன் ஒப்பந்தத்தில் ஈடுபட வேண்டும், இது மூலோபாயத் திட்டத்தின் பிரதிபலிப்பாகும், அதற்கு எதிராக பணிப்பாளர் நாயகத்தின் செயல்திறன் ஆண்டுதோறும் மதிப்பீடு செய்யப்பட்டு வெகுமதி உள்ளிட்ட ஊக்கத்தொகைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். இருப்பினும், ஆணையக்குழு பணிப்பாளர் நாயகத்துடன் செயல்திறன் ஒப்பந்தம் செய்யவில்லை. மேலும், பணிப்பாளர் நாயகத்தின் வருடாந்த செயல்திறன் மதிப்பீடு ஆணையக்குழுவால் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதற்குப்பதிலாக, இது தவிசாளரால் தனியாக மேற்கொள்ளப்பட்டு மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான செயல்திறன் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இது ஆணையக்குழுவில் இரண்டு சக்திவாய்ந்த பதவிகளுக்கு இடையே பொறுப்புகள் மற்றும் பொறுப்புணர்வின் மோசமான பகிர்வுக்கு வழிவகுக்கும். | 24 ஆகஸ்ட் 2023 அன்று நடைபெற்ற 238 வது கூட்டத்தில் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகத்தின் கேபிஜகளுக்கு (KPIs) ஒப்புக்கொண்டது. ஆணைக்குழுவின் உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்று செயற்பாடுகளை மீளாய்வு செய்து ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் நாயகத்தின் கேபிஜகள் (KPIs) ஒப்புக் கொள்ளப்பட்டு, பொறுப்புகள் மற்றும் பொறுப்புக்கூறலின் தெளிவான பிரிவை மேம்படுத்துவதற்காக ஒட்டுமொத்த ஆணைக்குழுவால் செயல்திறன் மதிப்பீடு செய்யப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.4 வழிகாட்டுதல் | ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் உறவை, வழிகாட்டுதலின் இணைப்பு II இல் கொடுக்கப்பட்டுள்ள வடிவத்தைப் பயன்படுத்தி ஆணைக்குழுவின் செயலாளரிடம் ஆண்டுதோறும் அறிவிக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான அத்தகைய அறிவிப்பு ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் அறிவிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பிரகடனங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. தேவைப்பாடு தொடர்ந்து நிறைவேற்றப்படும். | வருடாந்த பிரகடனம் உறுப்பினர்களால் ஆண்டுதோறும் ஆணைக்குழுவின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படும். |
| (உ) | அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.6 வழிகாட்டுதல் | சபையின் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சபையை வழிநடத்துவதற்கும் மற்றும் அனைத்து நடைமுறைகளும் சட்டப்பூர்வ தேவைகள் மற்றும் தொழில்துறை சிறந்த நடைமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்கும் சபையின் செயலாளரே முக்கியப் பொறுப்பாளியாவார், மேலும் வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். மேலும், ஏற்கனவே வேறொரு பணியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு ஊழியரையும் சபைச் செயலாளராக நியமிக்கக் கூடாது மற்றும் சபைச் செயலாளர் சபை துணைக் குழுக்களின் செயலாளராகச் செயல்பட வேண்டும். எவ்வாறாயினும், ஆணைக்குழுவிற்கு தகுதியான செயலாளர் இல்லை. தற்போது, இயக்குனர்-விசாரணை | முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) முதல் ஐந்து கணக்காய்வு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டது. முன்மொழிவை அனுப்புவதற்கான இறுதித் திகதி 26.09.2023 ஆகும். எவ்வாறாயினும், எங்கள் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு எந்த முன்மொழிவையும் பெறவில்லை. 27 செப்டம்பர் 2023 அன்று நடைபெற்ற ஆணைக்குழுவின் 239வது கூட்டத்தில் இது தெரிவிக்கப்பட்டது. மேலும் சட்ட நிறுவனங்கள், செயலகம் மற்றும் கணக்காய்வு நிறுவனங்களுக்கு விண்ணப்பங்களை அழைப்பதை நீட்டிக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அறிவுறுத்தினர். பெறுகை செயல்முறை 31 டிசம்பர் 2023 க்கு முன் | வழிகாட்டுதலின் விதிகளின் பிரகாரம் தேவையான தகுதிகள் கொண்ட செயலாளர் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படுவார் மேலும் அத்தகைய செயலாளர் ஆணைக்குழுவின் துணைக்குழுக்களின் செயலாளராகவும் செயல்படுவார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆணைக்குழுவின் செயலாளராகவும், உதவி இயக்குனர் - சட்டம் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகவும், அவர்களின் நிரந்தரப் பொறுப்புகளுக்கும் மேலதிகமாக வழிகாட்டுதலுக்கு மாறாக செயல்படுகின்றனர். | முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ஊ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் பிரிவு 7 | நிறைவேற்றுப் பிரிவு ஊழியர்களுக்கு வாகனங்கள் வாங்குவதற்கு வங்கிகள் மூலம் கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் ஆணைக்குழுவின் நிதியிலிருந்து ஒரு ஊழியருக்கு ரூபா.1,200,000 வாகனக் கடன் தொகையானது ஒவ்வொரு ரூபா.600,000 தவணைக்கும் முறையே 4.2 சதவீதம் மற்றும் 9 சதவீதம் வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டது. | 16 நவம்பர் 2021 அன்று பொது முயற்சிகள் (பீஈடி) திணைக்களத்தால் வழங்கப்பட்ட செயல்பாட்டுக் கையேட்டின் பிரிவு 2.3 இன் பிரகாரம் உருவாக்கப்பட்ட ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகக் கையேட்டை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு பின்பற்றுகிறது. வாகனக் கடன் திட்டமானது நிர்வாகக் கையேட்டின் ஒரு பகுதியாகும். | ஆணைக்குழுவின் ஊழியர்களின் நலன்களை முடிவு செய்யும் போது ஆணைக்குழுவானது அரசின் கொள்கைகளை கடைபிடிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.155,220,568 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா.86,790,315 ஆக காணப்பட்டது. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா.68,430,253 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான ஆண்டுக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணங்கள் வருமானம் ரூபா.35,295,181 ஆலும் வட்டி வருமானம் ரூபா.46,211,898 ஆலும் அதிகரித்தமையே முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| **விபரம்** | தொகை (ரூபா) | | | | வேறுபாட்டின் சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2020 | 2019 | 2022 | 2021 | 2020 | 2019 |
| **வருமானம்** | | | | | | | | |
| மானியத்தின் அங்கிகாரம் | - | - | 2,905,041 | 2,324,391 | - | -100% | 25% | 20% |
| நிதித் துறை நவீனமயமாக்கல் | 750 | 255,150 | 12,344,401 | 81,620,094 | 100% | -98% | -85% | - |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| திட்டம் (FSMP) இருந்தான வருமானம் | | | | | | | | |
| Repo மற்றும் அழைப்புக் கணக்கு மீதான வட்டி | 16,437,636 | 6,893,783 | 479,514 | 3,698,834 | 138% | 1,338% | -87% | 9,976% |
| திறைசேரி முறி முதலீட்டின் மீதான வட்டி | - | - | 33,151,511 | 92,882,074 | - | - | -64% | -2% |
| நிலையான வைப்பின் மீதான வட்டி | 1,231,844,234 | 515,764,257 | 588,341,378 | 477,484,713 | 139% | -12% | 23% | 33% |
| | | | | | | | | **செலவீனங்கள்** |
| ஊழியர் செலவுகள் | 127,680,340 | 127,134,065 | 109,096,963 | 112,323,915 | 0.5% | 17% | -3% | 42% |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் - இருக்கைப் படி | 1,754,354 | 1,384,859 | 865,972 | 540,000 | 27% | 60% | 60% | 2% |
| ஊழியர் நலன்புரி | 867,855 | 4,459,324 | 2,038,778 | 841,693 | -81% | 119% | 142% | -28% |
| ஊழியர் மருத்துவக் காப்புறுதி | 2,785,293 | 2,328,894 | 2,001,327 | 1,615,932 | 20% | 16% | 24% | 45% |
| உள்நாட்டு ஊழியர் பயிற்சி மற்றும் சந்தாப்பணம் | 1,168,025 | 921,188 | 401,492 | 1,610,639 | 27% | 129% | -75% | 27% |
| விடுமுறைக் கொடுப்பனவு | 744,985 | 1,796,425 | 1,673,310 | 1,218,344 | -59% | 7% | 37% | 77% |
| அச்சுப்பிரதி மற்றும் எழுதுபொருட்கள் | 1,560,693 | 2,764,004 | 2,413,783 | 3,406,080 | -44% | 15% | -29% | 106% |
| பொது விழிப்புணர்வு | 8,570,966 | 1,814,843 | 1,459,568 | 9,834,508 | 372% | 24% | -85% | 309% |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு EDP மற்றும் ஏனையவை | 2,969,581 | 2,103,839 | 3,298,073 | 2,107,863 | 41% | -36% | 56% | 21% |
| இயக்குனர்களின் வாகனப் படி | 4,487,603 | 4,570,890 | 3,166,986 | 3,246,712 | -2% | 44% | -2% | 4% |
| இயக்குனர்களின் எரிபொருள் படி | 3,364,460 | 1,356,590 | 1,030,514 | 1,066,755 | 148% | 32% | -3% | 6% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

ஆணைக்குழு மற்றும் தொழில்த்துறைக்காக கடந்த ஐந்து வருடங்களுக்காகக் கணக்கிடப்பட்ட முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| ஆணைக்குழு | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் (PPF) வளர்ச்சி | 11% | 12% | 19% | 24% | 23% | 25% |
| வருடாந்த செஸ் வருமானத்தின் வளர்ச்சி | 8% | 7% | 3% | 3% | 15% | 2% |
| மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்தின் சதவீதமாக செஸ் வருமானம் | 0.23 | 0.23% | 0.24% | 0.25% | 0.26% | 0.29% |
| வருடாந்த கட்டண வருமானத்தின் வளர்ச்சி | 8% | 5% | 3% | 33% | 19% | 13% |
| மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்தின் சதவீதமாக கட்டண வருமானம் | 0.11 | 0.11% | 0.12% | 0.11% | 0.09% | 0.09% |
| **தொழில்த் துறை** | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைப்பணம் | 1.07% | 1.38% | 1.39% | 1.27% | 1.24% | 1.19% |
| காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூபா.பில்லியன் | 947.3 | 879.8 | 789.7 | 689.6 | 606.6 | 564.9 |
| காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களின் வளர்ச்சி | 8% | 11% | 15% | 14% | 7% | 8% |
| நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக காப்புறுதித் துறையின் சொத்துக்கள் | 3.02 | 3.29% | 3.37% | 3.44% | 3.32% | 3.31% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் வெளியார் கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் கட்டிடத்தின் குத்தகை வாடகையாக 2022 ஆம் ஆண்டில் ரூபா.47,178,758 (2021 - ரூபா.44,631,663) செலுத்தப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது குத்தகை வாடகை 6 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. சதுர அடிக்கு முறையே வாடகை மற்றும் சேவைக் கட்டணம் ரூபா.351 மற்றும் ரூபா.78. செலவில் 8741 சதுர அடியில் ஆணைக்குழு வாடகைக்கு விடப்பட்டது. மேலும், கட்டிடத்தின் குத்தகை வாடகையின் சதவீதம் 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவில் 22 சதவீதம் அல்லது மொத்த வருமானத்தில் 13 சதவீதம் ஆகும். | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு வளாகத்திற்கான செலவு-பயன் பகுப்பாய்வை மேற்கொண்டது.<br><br>இடம், முதலீட்டுச் செலவு, வளாகத்தின் வயது மற்றும் நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழு அதன் 239வது கூட்டத்தில் தற்போதைய வளாகத்தைத் தொடர்ந்து ஆக்கிரமிக்க முடிவு செய்துள்ளது. | ஆணைக்குழு அவர்களின் செயற்பாடுகளைச் செய்வதற்கு ஏற்ற பொருளாதார இடமொன்றைத் தேட வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழுவானது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தன் பிரகாரம் அதன் பங்கை நிறைவேற்றுவதில் பொதுமக்களுடன் நெருக்கமாகக் கையாள்வதற்கான ஒரு நிறுவனமாக இருக்க வேண்டும். இருப்பினும், அதன் தற்போதைய இடம், | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு வளாகத்திற்கான செலவு-பயன் பகுப்பாய்வை மேற்கொண்டது. | தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் பொதுமக்களுக்கு வினைத்திறனான |

| | | |
|---|---|---|
| கலாச்சாரம் மற்றும் நுழைவு கதவுகள் கடுமையான பாதுகாப்பு நிலைமைகளின் கீழ் இருப்பதால், பாதிக்கப்படக்கூடிய பொது மக்களுக்கு அவற்றை அணுகுவது கடினம். மேலும், இணையதளம் மற்றும் அனைத்து தகவல்களும் (காப்புறுதி பத்திர உரிமையாளர்கள் புகார்கள் பக்கம் தவிர) ஆங்கிலத்தில் மட்டுமே இடம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிந்தது. எனவே, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் உத்தியோகபூர்வ மொழிக் கொள்கைக்கு ஆணைக்குழு இணங்கியிருக்கவில்லை. எனவே, மாற்றுத்திறனாளிகள், தகவல் தொழில்நுட்பம் படிக்காதவர்கள் மற்றும் மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் போன்ற பாதிப்புக்குள்ளான பிரிவினர் ஆணைக்குழுவின் சேவைகளைப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கலாம் என்று தெரிகிறது. மேலும், இது பொதுப் முறைப்பாடுகளுக்கு ஊக்கம் கெடுப்பதற்கும் மற்றும் குறைப்பதற்கும் ஒரு அறிகுறியாக இருக்கலாம். | இடம், முதலீட்டுச் செலவு, வளாகத்தின் வயது மற்றும் நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழு அதன் 239வது கூட்டத்தில் தற்போதைய வளாகத்தைத் தொடர்ந்து ஆக்கிரமிக்க முடிவு செய்துள்ளது.<br><br>இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் இணையதளத்தில் உள்ள ஆங்கில உள்ளடக்கங்களை சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சேவையை வழங்குவதற்கு ஆணைக்குழு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

## 3.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தங்கள் ஊழியர்களுக்கு சுய பங்களிப்பு காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகளை ஆணைக்குழு எடுக்கவில்லை. அதற்குப்பதிலாக ஆணைக்குழுவானது ஊழியர்களின் பங்களிப்பு இல்லாமல் காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்காக 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா.6.3 மில்லியன் நிதியினை செலவிட்டிருந்தது. இருப்பினும், 2017 ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அரை அரசுத் துறை ஊழியர்களுக்கான சுய பங்களிப்பு காப்பீட்டு திட்டத்தை நீட்டித்து, ஒவ்வொரு ஊழியருக்கும் மாதம் ஒன்றிற்கு ரூபா.1000 பங்களிப்பாக வசூலித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்காக மருத்துவக் காப்புறுதித் தொகைக்காக ஒரு ஊழியருக்கு ரூபா.132,038 ஆணைக்குழுவின் நிதியினை ஆணைக்குழு | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தொடக்கத்திலிருந்து ஊழியர்களுக்கு அவர்களின் நன்மைகளின் ஒரு பகுதியாக பங்களிப்பற்ற காப்புறுதித் தொகை வழங்கப்பட்டு நியமனக் கடிதங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, சுய பங்களிப்பு திட்டம் ஏற்றுக்கொள்ளப்படாது. | ஊழியர்களுக்கு சுய பங்களிப்பு காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

செலவழித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

### 3.3 செயற்திட்ட நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் காப்புறுதி மற்றும் நிதித் துறை நவீனமயமாக்கல் (FSMP) திட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழான மீள் காப்புறுதி வணிகம் ஆகியவற்றின் பாகுபாட்டிற்கான தொகையாக 945,450 அமெரிக்க டொலர் (SDR. 0.67 மில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்தப் பணம் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | DLI தொடர்பாக இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பிரித்தெடுக்கும் முன்மொழிவை சமர்ப்பித்தவுடன் மட்டுமே எழுகிறது. இருப்பினும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவர்களின் கொள்கை முடிவின் பிரகாரம் பிரிவினைக்கான முன்மொழிவை சமர்ப்பிக்கவில்லை, எனவே ஒருங்கிணைப்பு மற்றும் செல்வாக்குமிக்க நடவடிக்கைகளால் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவால் இந்தப் பணியை அடைய இயலாது. | செயற்திட்டம் வெற்றி பெற ஆணைக்குழு சரியான ஒருங்கிணைப்பு மற்றும் செல்வாக்கு மிக்க நடவடிக்கைகளை கொண்டிருக்க வேண்டும். |
| (ஆ) | மேற்கூறிய திட்டத்தின் நோக்கங்களை அடைய, நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் பணி ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்திற்கான ஆலோசகர்கள் அவ்வப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதையும் மற்றும் திட்டத்தின் பொதுவான நோக்கங்களை அடைவதற்கு அந்த ஆலோசகர்களிடையே வலுவான பரஸ்பர உறவு எதுவும் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. இந்த பலவீனமான செயற்திட்ட | நிதித் துறை நவீனமயமாக்கல் (FSMP) திட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவால் பணியமர்த்தப்பட்ட இரண்டு மதியுரையாளர்கள், மனிதவள நிபுணத்துவம் ஆயுட்கால மதிப்பீட்டு நிபுணத்துவத்துடன் கலந்துரையாடினார், ஏனெனில் இருவரும் ஒரே காலத்தில் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவில் | திட்ட முகாமைத்துவக் குழுவானது, திட்ட வெற்றியைப் பெற, சரியான ஒருங்கிணைப்பு மற்றும் தகுந்த நடவடிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவத்தின் காரணமாக எதிர்பார்த்த செயற்திட்ட நோக்கங்கள் மற்றும் முடிவுகள் எட்டப்படாமல், இறுதியில் செயற்திட்டத்தை கைவிட வேண்டியிருந்தது. | பணியாற்றினர். | |
| (இ) | மேற்க்கூறிய செயற்திட்டத்திற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரையாளர் 2022 மார்ச் 29 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அவரின் ஒப்பந்தத்தினை முடிவுறுத்தியுள்ளார். ‘‘இதுவரையிலுமான காப்புறுதி (ஆயுட்கால மதிப்பீட்டு) செயற்திட்டத்தின் மதியுரையாளரின் மதிப்பீடு’’ என ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரையாளரால் பெயரிடப்பட்டுள்ள 2022 சனவரி 24 ஆந் திகதியில் உள்ளபடியான அறிக்கைக்கமைய முகாமைத்துவத்தினால் அவரின் பரிந்துரைகளுக்கு ஆயுட்கால மதிப்பீட்டாளர் கருத்து வழங்காமை, செயல்நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் பின்தொடர் மேற்கொள்ள ஆணைக்குழுவினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராமை, அலகுகளின் தலைவர்கள் அவர்களின் முன்மொழிவுகளுக்கு நியாயமான வாதங்களுடன் பதிலளிக்காமை, இந்த திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய காப்புறுதி நிபுணர்களின் ஆதரவு இல்லாமல் ஆயுட்கால மதிப்பீட்டாளரின் பணி செய்யப்பட்டமை போன்ற காரணங்களால் முடிவுறுத்தப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பததற்கு தேவையான காப்புறுதி நிபுணர்களிடமிருந்து, காப்புறுதி மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை வழங்குவதற்கு ஆணைக்குழு கடப்பட்டுள்ள போதிலும், | ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் ஆயுட்கால மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனத்தை நியமிப்பதன் மூலம் பரிசீலிக்கப்படும். | ஆணைக்குழுவானது ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரையாளருடன் உடன்படிக்கையின் விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டியதுடன், ஒப்புக்கொள்ளப்பட்ட பணிகளை நிறைவேற்ற வேண்டும் அல்லது ஒப்பந்தத்தின் விதிகளை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழுவினால் உரிய தெளிவுபடுத்தல் வழங்கப்படாது அவரின் அறிவுரைகளை பெற்றுக்கொள்ளாது கவனத்திற் கொள்ளப்படாது விடப்பட்டுள்ளது. மேற்படி அவதானிப்புகளின் அடிப்படையில் ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரை செயற்பாட்டுக்காக ஐ.அ.டொ. 168,000 செலுத்தப்பட்டமை சிக்கனமற்றது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | கணக்காய்வுக்காக நிலவும் தகவல்களுக்கமைய, வழங்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்தின் பிரகாரம், ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரையாளர் எந்தவொரு அறிக்கையும் வழங்கப்பட்டோ அல்லது 3 கூறுகளுக்காக பணிகள் மேற்கொள்ளப்பட்டோ இருக்கவில்லை. ஆகவே, 17 கூறுகளில் 14 கூறுகளுக்காக வரைபு மற்றும் இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கணக்காய்வுக்கான தகவல்களுக்கமைய அந்த அறிக்கைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அந்த அறிக்கைகள் கட்டுப்படுத்துபவராக கருத்து தெரிவிப்பதற்கு, அபிவிருத்தி செய்வததற்கு மற்றும் கொள்கை உருவாக்கல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருடன் அந்த அறிக்கைகள் கலந்துரையாடப்பட்டமைக்கான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. | ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் ஆயுட்கால மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனத்தை நியமிப்பதன் மூலம் பரிசீலிக்கப்படும். | ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரையாளரிடமிருந்து இணங்கிய பணிகளை செய்விப்பதற்கு ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |
| (உ) | பணித் திட்டத்தின் பிரகாரம், ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரையாளரின் பணியானது காப்புறுதி மதியுரையாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர் போன்ற ஏனைய மதியுரையாளர்களுடன் தொடர்புபட்டிருந்தது. ஆகவே, அந்த மதியுரையாளர்களிடையே | உடன்படிக்கையின் / பெறுகைகள் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு மதியுரை சேவைக்காக வருமானத்தின் ஒரு | செயற்திட்ட முகாமைத்துவ குழுவிற்கு செயற்திட்டத்தின் வெற்றிக்காக மதியுரையாளர்களிடையே முறையான இணைப்பொன்று காணப்பட வேண்டியதுடன், கணக்காய்வுக்காக கோரப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

இணைப்பினை மேற்கொள்ள ஆணைக்குழு அவர்களுக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) மனிதவள மதியுரையாளருக்கு சாட்டப்பட்டுள்ள பணிகளுக்கமைய், மதியுரையாளரின் பணியை நிறைவேற்றும் போது சேவை பெறுநரின் எதிர்கால வளர்ச்சி தொடர்பில் கருத்தினை பெற்றுக்கொள்வதற்காக மதியுரையாளரால் செயற்திட்டத்தின் கீழ் வாடகைக்கு எடுத்த ஏனைய மதியுரையாளர்களுடன் தொடர்புபட வேண்டிய இறுதிப் பணியாகும். செயற்திட்ட செயன்முன்னேற்றத்திற்கமைய ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரையாளர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தனர். மனிதவள மதியுரையாளருக்கு இந்த செயற்திட்டத்தின் ஏனைய மதியுரையாளர்களை தொடர்புகொள்வதற்கும் கலந்துரையாடுவதற்கும் இயலும் என்பதற்கான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. ஆகவே மதியுரையாளர்களிடையே முறையான இணைப்பு மற்றும் தொடர்பாடல் இல்லாதிருந்த காரணத்தால் செயற்திட்டத்தில் எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

பகுதியை ஈடுபடுத்த உத்தேசித்தது.

மதியுரை சேவைகளாவன:

i. ஆயுட்கால மதிப்பீட்டு நிபுணத்துவம்

ii. காப்புறுதி இருப்பினும், கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால், இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவானது இது போன்ற மதியுரையாளர்களை மற்ற மதியுரையாளர்களுடன் ஒருங்கிணைக்க உதவுவதற்கு காப்புறுதி மதியுரையாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர் ஐ கொள்முதல் செய்யவில்லை. மனிதவள மதியுரையாளர் ஆயுட்கால மதிப்பீட்டு நிபுணத்துவத்துடன் கலந்துரையாடினார், ஏனெனில் இருவரும் ஒரே காலத்தில் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவில் பணியாற்றினர்.

iii. தகவல் தொழிநுட்ப நிபுணத்துவம்

iv.மனித வள நிபுணத்துவம்

v. இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கான ஆலோசனை நிறுவனம்.

| | | | |
|---|---|---|---|
| | | சரியான ஒருங்கிணைப்பு வசதி செய்யப்பட்டது. மேலும், உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவில் ஆயுட்கால மதிப்பீட்டு மதியுரையாளர் தளத்தில் வேலை செய்யத் தவறிவிட்டார். | |

| 3.4 | மனித வள முகாமைத்துவம் கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் ஆணைக்குழு தமது சொந்த பதவிநிலை விபரம் மற்றும் சம்பளத் திட்டத்தை தீர்மானித்திருந்தது. 2019 மே 31 ஆந் திகதிய குறிப்பின் மூலம் பணிப்பாளர் நாயகத்தினால் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான சம்பள சீர்திருத்தம், பணிநிலை விபர திருத்தம், ரூபா.7,800 தொகையான வாழ்க்கைச் செலவினப் படிகள், அடிப்படை சம்பளத்தில் இருந்து 15% திறன் கொடுப்பனவு படி மற்றும் ரூபா.12,500 தொகையான விசேட வாழ்க்கைப் படி ஆகியவற்றுக்கு 2018 யூலை 01 ஆந் திகதி முதல் தலைவரின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழு நிதி அமைச்சின் வரம்புக்கு உட்பட்ட ஒரு நிறுவனமாக இருந்தாலும், ஆணைக்குழு அவர்களின் பணிநிலை விபரம் மற்றும் சம்பளம் மற்றும் படிகளின் அதிகரிப்பு என்பவற்றைத் தீர்மானிக்க பொதுத் திறைசேரியிடம் இருந்து அனுமதி அல்லது ஒப்புதலைப் பெற்று இருக்கவில்லை. | இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊதியம் தொடர்பான குழு ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டது, கடந்த 13 ஆண்டுகளாக 2012 இல் ஒரே ஒரு சம்பளத் திருத்தம் மட்டுமே வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே ஊழியர்களின் சம்பளம் சந்தை விகிதங்களுடன் குறிப்பாக மற்ற நிதித் துறை கட்டுப்பாட்டாளர்கள் வழங்கும் ஊதியத்துடன் ஒப்பிடப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டது.<br><br>இதன் விளைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவானது தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களை பணிக்கு அமர்த்த முடியாது போயுள்ளது மற்றும் தற்போது உள்ள தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களைத் தக்கவைத்து காப்புறுதித் துறையில் எப்போதும் அதிகரித்து வரும் சிக்கலான சவால்கள் மற்றும் மேலும் விசாரணைகள் இணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்தல் போன்றவற்றின் பின்னணியினையும் எதிர் கொள்ளவும் முடியாது போயுள்ளது. கட்டுப்பாட்டாளரின் விளைதிறன், வினைத்திறன் மற்றும் பொருத்தத்தை மேம்படுத்த சர்வதேச | ஆணைக்குழு அவர்களின் பதவிகளின் பணிநிலை விபரம் மற்றும் ஊதியக் கட்டமைப்பிற்கு நிதி அமைச்சிடம் இருந்து ஒப்புதல் பெற வேண்டும். |

(ஆ) 2018 யூலை 18 ஆந் திகதி இடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 03/2018 மற்றும் நல்லாளுகை வழிகாட்டி என்பவற்றிற்கு முரணாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறாமல் சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் சம்பளம் 12.98% முதல் 59.73% வரை அதிகரித்துள்ளது.

காப்புறுதி நடைமுறைகளுக்கு ஏற்ப தற்போதைய கட்டமைப்பை மேம்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. மேலும், மற்ற கட்டுப்பாட்டாளர்களைப் போலவே நல்ல இழப்பீட்டுத் தொகுப்பைக் கொண்டிருப்பது தொடர்பான பின்வரும் உண்மைகளை முன்னிலைப்படுத்த விரும்புகிறோம். இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒவ்வொரு பதவிக்கான ஆட்சேர்ப்புக்களும் புகழ் பெற்ற நிறுவனங்களின் முந்தைய அனுபவத்துடன் மேற்க்கொள்ளப்படுகின்றன. மேலும் அனைத்து நிறைவேற்று மற்றும் அதற்கு மேற்பட்ட ஊழியர்களும் தகுந்த தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரிவு 10 குறிப்பிடுவது:

"ஆணைக்குழு தனது செயல்பாடுகளை திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவையானதாகக் கருதும் அத்தகைய அதிகாரிகளை நியமிக்கலாம் மற்றும் அவ்வாறு நியமிக்கப்படும் அதிகாரிகளுக்கு அத்தகைய முறையிலும் அத்தகைய விகிதத்திலும் ஊதியம் வழங்கப்படும் மற்றும் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் சேவை நிபந்தனைகளுக்கு உட்பட்டது." சட்டப்பூர்வ அதிகாரத்தின் பார்வையில், பீஈடி 01/2021 இன் இணைப்பு அ இல் பட்டியலிடப்பட்ட ஒரு நிறுவனமாக இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவினை வகைப்படுத்தலாம். அதன்படி, பீஈடி 01/2021 இன் அடிப்படையில் ஆணைக்குழு நிதி அமைச்சிற்கு எழுதும்.

| | | | |
|---|---|---|---|
| | | இது தொடர்பாக MOF அதிகாரிகளுடன் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு அதிகாரிகள் கலந்துரையாடினர். | |
| (இ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து ஒரு செயல்திறன் ஊக்கத்தொகை பொது திறைசேரியின் அனுமதியின்றி செலுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் பிரகாரம், ஒரு (01) மாத அடிப்படைச் சம்பளத்தின் ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவு அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு முதல் பொதுத் திறைசேரியின் அங்கிகாரம் இன்றி ஒன்றரை மாத (1½) மொத்த சம்பளமாக மாற்றப்பட்டது. இதன் காரணமாக, மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மொத்த ஊக்குவிப்புத் தொகை ரூபா.4,605,381 ஆல் அதிகரிக்கப்பட்டு இருந்தது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 105% அதிகமாகும். மேலும், அனைத்து ஊழியர்களும் இறுதி மதிப்பீட்டில் 100% மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். ஆகவே, உண்மையான செயல்திறன் மதிப்பீடு ஆணைக்குழுவினால் மேற்க்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. | தற்போதுள்ள செயல்திறன் மதிப்பீட்டு முறையானது, பல்வேறு செயல்திறன் மதிப்பீட்டு முறைகளை ஆய்வு செய்து, ஒரு பணியாளரின் செயல்திறன் தொடர்பான பல அம்சங்களை உள்ளடக்கிய பிறகு செயல்படுத்தப்பட்டுள்ளது.<br><br>ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயல்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்புத் திட்டத்தை பல ஆண்டுகளாக நிதி அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளோம். இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவானது செயல்திறன் ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் அதில் செய்யப்பட்ட அனைத்து திருத்தங்களையும் அவ்வப்போது நிதி அமைச்சிடம் பகிர்ந்து கொண்டுள்ளது. இருப்பினும், 31 மார்ச் 2023 அன்று அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட புதிய PA அமைப்புடன் பீஈடி 01/2021 இன் அடிப்படையில் செயல்பட்டது.<br><br>ஆணைக்குழுவானது அதன் 195வது கூட்டத்தில் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு காலத்திற்கான அவர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்த பிறகு செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகையாக அதிகபட்சமாக 1.5 மாதங்களின் மொத்த சம்பளத்தை வழங்க ஒப்புதல் அளித்தது. ஆணைக்குழுவின் முடிவுகளின் அடிப்படையில் கொடுப்பனவு செலுத்தப்பட்டது.<br>இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவானது புதிய செயல்திறன் மதிப்பீட்டுத் திட்டத்தை 31 மார்ச் 2023 அன்று பொது முயற்சிகள் | செயல்திறன் ஊக்குவிப்பு திட்டத்திற்கு ஆணைக்குழு பொது திறைசேரியிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்திற்கு அனுப்பியது. பீஈடி ஆல் கோரப்பட்ட மேலதிக விவரங்கள் 10 அக்டோபர் 2023 அன்று அனுப்பப்பட்டன. | |
| (ஈ) | 18 யூலை 2018 திகதியிட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 03/2018 மற்றும் அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயல்பாட்டு கையேட்டின் பிரிவு 3 இன் பிரகாரம், அனைத்து அமைச்சுக்களும் பிற தொடர்புடைய அதிகாரிகளும் பொதுத்திறைசேரியின் முன் அனுமதியின்றி ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதையும் சம்பளம் மற்றும் பணிநிலைகளை அதிகரிப்பதையும் தவிர்க்க வேண்டும். எவ்வாறாயினும், ஒரு (01) இயக்குனர், பதின்மூன்று (13) முகாமையாளர்கள்/உதவி முகாமையாளர்கள் மற்றும் ஒரு (01) செயலாளர் பதவிகள், பொதுத்திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி நிரப்பப்பட்டுள்ளன. | ஆணைக்குழு 57 பதவிகளுக்கு நிதி அமைச்சிடம் அனுமதி பெற்றுள்ளது. இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவில் அனைத்து புதிய ஆட்சேர்ப்புகளும் நிதி அமைச்சின் ஒப்புதலுடன் உள்ளன.<br><br>மொத்த பணிநிலைக்கு எந்த விளைவையும் ஏற்படுத்தாத பதவிஉயர்வு தரங்களுக்கான ஊழியர்கள் 05 யூலை 2023 அன்று பீஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பாக MOF அதிகாரிகளுடன் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு அதிகாரிகள் கலந்துரையாடினர். | ஆணைக்குழுவானது சம்பளம் மற்றும் பணிநிலை திருத்தங்களுக்கு பொதுத்திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெற வேண்டும். |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உறுப்புரை 40 இன் பிரகாரம், ஒவ்வொரு கணக்காய்வு நிறுவனத்திற்கும் அதன் சொந்த உள்ளகக் கணக்காய்வாளர் இருக்க வேண்டும், அவர் அத்தகைய கணக்காய்வு நிறுவனத்தின் ஆளும் குழுவால் முறையாக நியமிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு செய்ய வேண்டும். உட்பிரிவு (1) இன் கீழ் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை என்றால், அத்தகைய நியமனம் இந்தச் சட்டத்தின் செயல்பாட்டுத் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வின் கீழ் உள்ள | 2023 – 2025 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார். | ஆணைக்குழு உடனடியாக ஒரு உள்ளகக் கணக்காய்வாளரை ஆணைக்குழுவிற்கு நியமிக்க வேண்டும். |

ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வாளர் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வுக் குழு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக்கான வழிகாட்டுதல்கள் 2021 இன் வழிகாட்டுதல் 4.2(ஈ) இன் பிரகாரம், தொடர்புடைய அமைச்சின் தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் (CIA) கணக்காய்வுக் குழுவின் அவதானிப்பாளராக பணியாற்ற முடியும்.<br>இருப்பினும், 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுக்களுக்கு தொடர்புடைய அமைச்சின் தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் (CIA) அழைக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளரின் சேவைகளைப் பெறுவதற்காக, கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு தலைமை உள்ளகக் கணக்காய்வாளரை அழைக்க வேண்டிய அவசியம் இப்போதைக்கு எழவில்லை என்பதை குழு அவதானித்தது. மேலும், கருத்து ஒரு பரிந்துரை மட்டுமே மற்றும் அது மேலதிக செலவுகளை ஏற்படுத்துவதால், இந்த கருத்தை தற்போது பரிசீலிக்க வேண்டிய அவசியமில்லை என்று குழு கருதுகிறது. | ஆணைக்குழு வழிகாட்டுதலின் விதிகளை கடைபிடிக்க வேண்டும். |
| (ஆ) | அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக்கான வழிகாட்டுதல்கள் 2021 இன் வழிகாட்டுதல் 4.2(ஏ) இன் பிரகாரம், கணக்காய்வுக் குழு (AC) குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும். எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது மீளாய்வின் கீழ் உள்ள ஆண்டு முழுவதும் கணக்காய்வுக் குழுக்களை வழக்கமான அடிப்படையில் நடத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.<br>வழிகாட்டுதலின் பிரிவு 2.6 இன் அடிப்படையில் தேவையான தகுதிகளுடன் ஆணைக்குழுவிற்கு ஒரு சபைச் செயலாளர் இல்லாததால் இது முக்கியமாக நிகழ்ந்தது. | அதற்கான உறுப்பினர்களை நியமித்த பிறகு கணக்காய்வுக் குழு கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் நடத்தப்படுகின்றன. | ஆணைக்குழு கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை வழக்கமான அடிப்படையிலும் மற்றும் பயனுள்ள முறையிலும் நடத்த வேண்டும். |